# வாக்குமூலம்

## மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம்–I, கொடைக்கானல்.

**தேதி: 06.03.2025**

**OS. No. 36/ 2016**

**வழக்கு சாட்சி PW.1–** வேலுச்சாமி , த/பெ. திருக்கரண்

( சாட்சி சத்தியப்பிரமாணம் செய்து 1, 2 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார் )

**1, 2 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :**

பிராதில் உள்ள விபரம் எனக்கு முழுவதும் தெரியுமா என்றால் தெரியும். நான் ஐந்தாம் வகுப்பு வரை படித்துள்ளேன் . எனக்கு ஆங்கிலம் எழுதப்படிக்க தெரியுமா என்றால் தெரியாது . பிராது ஆங்கிலத்தில் தான் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். எனக்குஆங்கிலம் தெரியாததால் ஆங்கிலத்தில் தாக்கல் செய்துள்ள பிராதில் உள்ள முழுவிபரம் எனக்கு தெரியாது என்றல் சரியல்ல . நான் 3ம் பிரதிவாதிக்கு எழுதிக்கொடுத்த ஒத்திப் பத்திரத்தை என்னிடம் பணம் வாங்கிக்கொண்டு இரத்து செய்து கொடுக்க வேண்டும் என்று இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளேன். நான் பிராதில் அவ்வாறு எந்த பரிகாரமும் கேட்டு , தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல . தாவா சொத்தின் சர்வேஎண். 424 ஏ, பட்டா எண். 1912, மொத்த விஸ்தீரணம் 3 ¼ செண்ட் ஆகும் . மேற்கண்ட சொத்திற்கு என் பெயரில் மட்டுந்தான் பட்டா உள்ளதா என்றால் ஆமாம். தாவா சொத்திற்கு என் பெயரில் மட்டும் தனிப்பட்ட பட்டா இல்லை என்றும் , கூட்டுப்பட்டாவாக தான் உள்ளது என்றால் சரியல்ல . என் பெயரில் கொடுக்கப்பட்ட தனிப்பட்டாவை இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன் . நான் அவ்வாறு எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றும் , வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் பிரகாஷ், மோகினி, சையதுஅபுதாகிர் ஆகிய மூவரை சேர்த்து

தான் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் . பிரதிவாதிகள் மோகினி மற்றும் பிரகாஷ் ஆகியோர்கள் அபுதாகிருடன் சேர்ந்து தாவா சொத்தை அபகரிக்க வேண்டும் என்பதற்காக தாவா சொத்தில் உள்ள என்னுடைய கடையை இடித்துவிட்டார்கள். அதனால் அவர்களை இவ்வழக்கில் சேர்த்துள்ளேன் . மேலும், மோகினி மற்றும் பிரகாஷ் அவர்களுக்கு தாவா சொத்தை நான் கிரைய அக்ரிமெண்ட்டை 2007 ம் வருடம் போட்டுக் கொடுத்துள்ளேன் , சரியாக நினைவில்லை. 3ம் பிரதிவாதி சையது அபுதாகிருக்கு ஒத்தி எழுதிக் கொடுத்து அது நிலுவையில் இருந்தபோதே 1 மற்றும் 2 பிரதிவாதிகளுக்கு கிரைய அக்ரிமெண்ட்டை எழுதிக் கொடுத்துள்ளேனா என்றால் ஆமாம் , அந்த விபரம் 1 , 2 பிரதிவாதிகளுக்கும் தெரியும். 3ம் பிரதிவாதிக்கு கொடுத்த ஒத்தி காலம் முடிவதற்குள் 1, 2 பிரதிவாதிகளுக்கு கிரைய அக்ரிமெண்ட் போட்டுக் கொடுத்தது தவறு என்றால் சரியல்ல . மேற்கண்ட கிரைய அக்ரிமெண்ட் அடிப்படையில் கிரைய ஆவணம் பதிந்து கொடுத்தேனா என்றால் இல்லை , அதற்குள் அவர்கள் தாவா சொத்தில் இருந்த கடையை இடித்து விட்டார்கள். அந்த கடையை இடித்ததால் தான் நான் அவர்களுக்கு கிரையம் கொடுக்கவில்லையா என்றால் ஆமாம் . நான் என் நிரூபண வாக்குமூலத்தில் கிரைய அக்ரிமெண்ட் 1 மாத காலத்திற்குள் கிரைய மீதித் தொகையினை செலுத்தி, தனது கடைமையினை முன்வராமல் வீண் காலம் செய்துவந்ததாக சொல்லியுள்ளேன் என்றால் அவ்வாறு நான் எதுவும் சொல்லவில்லை. நான் தான் 1, 2 பிரதிவாதிகளிடம் கிரையம் பதிந்து கொடுப்பதில் பிரச்சனை உள்ளதாகவும் , அதை முடித்துவிட்டு பதிந்து தருவதாக சொன்னேன் என்றால் சரியல்ல. நான் மாணிக்கம் என்பவருக்கு தாவா சொத்து சம்மந்தமாக ஏதேனும் எழுதிக் கொடுத்துள்ளேனா என்றால் இந்த வழக்கு சங்கதிகள் நடைபெறுவதற்கு முன்னர் அவரிடம் கடன் பெற்று அதற்கு ஒத்தியாக தாவா சொத்தை எழுதிக் கொடுத்தேன் . அது முடிந்து போய்விட்டது. அந்த பிரச்சனை முடியவில்லை என்றும், மாணிக்கம் என்பவர் பழநி சார்பு நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண். 161/2006 என்ற வழக்கு தாக்கல் செய்திருந்தாரா என்றால்

செய்திருந்தார், அது தற்போது முடிந்துவிட்டது. அந்த வழக்கு எப்போது முடிந்தது என்றால் இந்த வழக்கு சம்பவம் நடைபெறுவதற்கு 2 , 3 வருடங்களுக்கு முன்னர் முடிந்துவிட்டது. நான் மாணிக்கம் என்பவருக்கு ஒத்திப் பத்திரத்தை பதிவு செய்து கொடுத்தேனா என்றால் ஆமாம், அந்த பதிவை நீக்கம் செய்துவிட்டதா என்றால் அது தற்போது நீக்கம் செய்யப்பட்டுவிட்டது. நான் மாணிக்கத்திற்கு எழுதிக்கொடுத்த ஒத்திப்பத்திரம் தற்போது வரை இரத்து செய்யப்படவில்லை என்றும், சார்பதிவாளர் அலுவலகத்தில் அது தற்போதும் நிலுவையில் தான் உள்ளது என்றும் , அதனால் தான் 1, 2 பிரதிவாதிகள் பெயரில் கிரையம் பதிவு செய்ய முடியவில்லை என்றால் சரியல்ல. தற்போது வரை வில்லங்கச் சான்றிதழில் அந்த ஒத்திப்பத்திரம் நிலுவையில் உள்ளதாக குறிப்பிடப்படுகிறது என்றால் சரியல்ல. நான் 1, 2 பிரதிவாதிகளிடம் கிரைய அக்ரிமெண்ட் தொகை ரூபாய் . 4,90,000 – ற்கு ஏற்படுத்திக் கொண்டேன், அட்வான்ஸ் தொகையாக ரூபாய். 50,000 – பெற்றுக்கொண்டேன். அந்த கிரைய அக்ரிமெண்ட்டின் படி தற்போது வரை கிரையம் பதிந்து கொடுக்கப்படவில்லை என்றால் சரிதான். தாவா சொத்தை பல நபர்களிடம் சொத்தை விற்பனை செய்வதாக சொல்லி பணம் வாங்கியுள்ளேன் என்றால் சரியல்ல. தாவா சொத்தானது 2ம் பிரதிவாதி மோகினியின் அனுபவத்தில் தான் உள்ளது என்றால் சரியல்ல , என்னுடைய அனுபவத்தில் தான் உள்ளது. பிரதிவாதிகள் கடையை இடித்து விட்டதாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல . நான் நிரூபண வாக்குமூலத்தில் நானும், எனது குடும்பத்தினரும் 1 மற்றும் 2 பிரதிவாதிகளை தாக்கியதாக தெரிவித்துள்ளதாகவும், அவ்வாறு எவ்வித சம்பவமும் நடைபெறவில்லை என்றும், எங்கள் பெயரில் பதிவு செய்யப்பட்ட வழக்கானது பொய்யானது என்று தெரிவித்துள்ளேன் என்றால் சரிதான். அந்த வழக்கு பொய்யான வழக்கு என்பதற்காக நான் ஏதேனும் நடவடிக்கை எடுத்தேனா என்றால் இல்லை. முன்ஜாமீன் கேட்டு மாண்புமிகு மெட்ராஸ் உயர்நீதிமன்றம் மதுரைக்கிளையில் CrlOP.(MD) No. 8868/2016 என்ற வழக்கு தாக்கல் செய்திருந்தேன் என்றால் சரிதான். அந்த

வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் சரிதான் , சமாதானம் செய்து கொள்ளலாம் என்று பிரதிவாதிகள் கூறியதால் தள்ளுபடி செய்யப்பட்டது. அவ்வாறு தள்ளுபடி செய்யப்படவில்லை என்றும் எங்கள் மீதான குற்றச்சாட்டு கடுமையான குற்றச்சாட்டு என்பதால், அந்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் சரியல்ல. பிரதிவாதிகள் தரப்பில் சமாதானம் செய்து கொள்ளலாம் என்று சொல்லியிருந்தால் எங்கள் வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டிருக்காது என்றும் , எங்களுக்கு முன்ஜாமீன் கொடுத்திருப்பார்கள் என்றால் சரியல்ல . மேற்கண்ட வழக்குச் சம்பவத்தின்போது, நாங்கள் தான் 2ம் பிரதிவாதியை அடித்து காயம் ஏற்படுத்தி, அதன் காரணமாக அவர் மருத்துவமனையில் இருந்தார் என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதி பிரகாஷ் என்பவரை நானும், என் குடும்பத்தாரும் சேர்ந்து சம்மத உடன்படிக்கை ஏற்படுத்திக் கொண்டோம் என்றும், அதில் நானும், என் மனைவி தங்கம்மாள், என் மகன் பாலகிருஷ்ணன், இன்பராஜ், என் மகள் சகுந்தலா, சரோஜா ஆகியோர்கள் சேர்ந்து கடந்த 17.12.2014ம் தேதியன்று நடராஜ் DF Finance, குணசேகரன், தாசன் ஆகியோர்களிடம் பெற்ற மொத்த தொகையான ரூபாய். 75,000 /- அத்துடன் குடும்ப செலவிற்காக பெற்ற ரூபாய். 30,000 /- ஆகியவற்றை 1ம் பிரதிவாதி கொடுத்துவிட்டு , தாவா சொத்தை நாங்கள் கிரையம் பெற்றுக் கொள்வதாக குறிப்பிட்டு ஏற்படுத்திக் கொண்டோம் என்றால் இல்லை . என்னிடம் காட்டப்படும் 17.12.2014ம் தேதியிட்ட சமரச உடன்படிக்கையில் உள்ள கையொப்பம் என்னுடையது தான் என்றால் சரிதான் . நான் பல நபர்களிடம் கடன் வாங்கிவிட்டு , அதை திருப்பி தராமல் மோசடி செய்வது தான் வழக்கம் என்றால் சரியல்ல.

M SELVAM Digitally signed by M SELVAM Date: 2025.03.06 15:46:50 +0530

District Munsif cum Judicial Magistate No.I,
Kodaikanal.